கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு 2/2023

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 கதிரேசன் திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 16.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. எனது தற்போதைய வயது என்ன என்றால் 51 ஆகும். நான் பிறந்த நாள் முதல் அதே ஊரில் தான் வசிக்கிறேன் என்றால் சரிதான். அதே ஊரில் 1ம்வாதியும், அவரது தம்பியும் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் வசித்து வரும் வீடு எந்த வருடம் கட்டப்பட்டது என்றால் எனது தந்தையார் காலத்தில் கட்டப்பட்ட வீடாகும். எனது தந்தை பெயர் ஆறுமுகம். 1ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு என்றால் எனது உடன்பிறந்த அண்ணன் ஆவார். 1ம் பிரதிவாதியின் தந்தை பெயர் என்ன என்றால் ராஜகோபாலன் ஆகும். ராஜகோபாலன் எனது பெரியப்பா ஆவார். எனது பெரியப்பா எனது அண்ணன் 1ம் பிரதிவாதியை மகனாக தத்து எடுத்துக்கொண்டார்.

2. 3,4 பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு என்றால் எனது மற்றொரு அண்ணன் செல்வராஜின் மகன்கள் ஆவார்கள். நான் குடியிருக்கும் சொத்து எனது தந்தை ஆறுமுகத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வாதிகளின் சொத்திற்கு எந்த திசையில் எனது இடம் உள்ளது என்றால் வடபுறம் உள்ளது. எனது வீட்டிற்கு வாசற்படி எந்த திசையை நோக்கி உள்ளது என்றால் மேற்கு நோக்கி உள்ளது. எனது இடத்திற்கு கிழக்கே என்ன உள்ளது என்றால் புருசோத்தம்மனின் தோப்பு உள்ளது. மேல்புறம் தென்வடல் 3 அடி அகல பஞ்சாயத்து வீதி உள்ளது. வடபுறம் நகராட்சி சந்து உள்ளது. எனது வீடு மற்றும் வீட்டை சுற்றி உள்ள எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் நான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான்.

3. அதேபோல் வாதிகளும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட வீடு மற்றும் வீட்டை சுற்றி உள்ள காலி இடத்தை அனுபவம் செய்ய உரிமை உடையவர்கள் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தென்புறம் வாதிகள்

வீடு உள்ளது என்றால் சரிதான். வாதி எனக்கு முன்னர் வீடு கட்டினாரா என்றால் இல்லை. தற்சமயம் தான் அரசாங்க திட்டத்தின் கீழ் கட்டினார். வாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தான் வீடு கட்டியுள்ளனரா என்றால் சரிதான். எனது வீட்டிற்கு கழிவறை வசதி உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி கழிவறை அரசாங்க திட்டத்தின் கீழ் கட்டப்பட்டதா என்றால் எனது சொந்த செலவில் கட்டப்பட்டது.

4. செப்டிங் டேங்க் கட்டவில்லை என்றால் உறை வைத்துள்ளேன். உறையிலிருந்து வழிந்து வரும் நீரானது எந்த திசையில் செல்லும் என்றால் எனது வீட்டிற்கு கிழக்கே செல்லும். மேற்படி உரையானது எனது வீட்டிற்கு எந்த திசையில் போடப்பட்டுள்ளது என்றால் கீழ்புறத்தில் உள்ளது. வாதிகள் வீட்டிற்கு தென்புறத்தில் உள்ளது. கழிவறையிலிருந்து வரும் நீரானது மாசு ஏற்படுத்துவதாக கூறி என் மீதும், எனது தாயாரின் மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கிற்கு பின்னரும் மேற்படி கழிவுநீர் வெளியேறுவது சம்மந்தமாக எனக்கும் வாதிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் மேற்படி கழிவுநீரானது குழாய் உடைந்த காரணத்தினால் வெளியேறியதால் பிரச்சனை ஏற்பட்டது.

5. மேற்படி பிரச்சனை சம்மந்தமாக 1ம் வாதி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். காவல் துறையினர் உரிமையியல் நீதிமன்றத்தை நாடி பரிகாரம் தேடி கொள்ள அறிவுறுத்தினார்கள் என்றால் சரியல்ல. குழாய் சரிபடுத்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டது. மேற்படி குழாயை சரிபடுத்தாத காரணத்தினால் தான் இவ்வழக்கானது வாதிகளால் தாக்கல் செய்யப்பபட்டுள்ளது என்றால் சரியல்ல. மழைகாலமாக இருந்ததால் மேற்படி குழாயை சரிபடுத்த சற்று கால தாமதமாகிவிட்டது. அதற்குள் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டார்கள். இவ்வழக்கு 2023ம் ஆண்டு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

6. மேற்படி கழிவுநீர் வழிவது சம்மந்தமாக என் மீதும் எனது தாயார் மீதும் குளித்தலை குற்றவியல் நீதிமன்றம் எண்.2ல் தனிநபர் புகார் அளித்தார் என்றால் சரிதான். மேற்படி பிரச்சனையை பேசி சுற்றுசுவர் எழுப்பி, பிவிசி குழாயை சரிசெய்து சமரசமாக போவதாக ஒப்புக்கொள்ளப்பட்டு மேற்படி குற்றவியல் வழக்கு முடிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி குற்றவியல் வழக்கில் வாதிகளின் வழக்கறிஞராக யார் முன்னிலையாகியது

என்றால் வழக்கறிஞர் திரு.சாகுல் அமீது அவர்களும், அதனை தொடர்ந்து வழக்கறிஞர் திரு.மூர்த்தி அவர்களும் முன்னிலையாகினர். வழக்கறிஞர் திரு.சாகுல் அமீது தான் மேற்படி குற்றவியல் வழக்கை எனக்கும் வாதிகளுக்கும் சமரசமாக பேசி முடித்து வைத்தார் என்றால் சரிதான்.

7. வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்திற்குள்ளாக வடபுறம் சுற்றுசுவர் எழுப்பிக் கொள்ள எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் அவர் இடத்திற்குள் கட்டிக்கொள்ள ஆட்சேபனை இல்லை. பொதுவாக கழிவுநீர் வெளியேறுவது குழாய் வழியாக சென்று உரிய இடத்தை அடைந்தால் துர்நாற்றம் அடையாது என்றும், ஆனால் வெளியே விடப்பட்டால் துர்நாற்றம் வர வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். வாதி அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வடக்கே தென்புறம் சற்று தள்ளி சுற்றுசுவர் எழுப்ப முயற்ச்சி செய்த போது நான் அதை தடுத்தால் தான் இவ்வழக்கை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

8. தொடர்ந்து நாங்கள் அமைதியாக வாதிகளை குடியிருக்கவிடாத காரணத்தால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி இவ்வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. எனது தரப்பில் இவ்வழக்கில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் வாதிகளின் கட்சியை குறிப்பிட்டு மறுத்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தை வாதி அவர் இஷ்டம் போல் அனுபவம் செய்வதை நான் தடுத்த காரணத்தினால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே, வாதி கோரியபடி இவ்வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**